

FREE EDITION

September - 2016

# ஜோதி

# Jothi Spiritual Newsletter

ஜோதி 10 : சுடர் 07 - 115

## ஆன்மிகச் செய்திச்சுடர்

### மூல மந்திரம்

ஓம் சக்தியே பராசக்தியே!
ஓம் சக்தியே ஆதி பராசக்தியே!
ஓம் சக்தியே மருவூர் அரசியே!
ஓம் சக்தியே ஓம் விநாயகா!
ஓம் சக்தியே ஓம் காமாட்சியே!
ஓம் சக்தியே ஓம் பங்காரு காமாட்சியே!
*

**ஆன்மிககுரு அருள்திரு அம்மா**

அவர்களின்

48ஆவது

**திருமணநாள்**

**04.09.2016**



அருள்திரு பங்காரு அடிகளார், திருமதி இலட்சுமி பங்காரு அடிகளாரின்

**திருமண நாள் நன்னாளில் நல்லாசிகளை வேண்டும்**

-செவ்வாடை சக்திகள்

## பெண் சிருஷ்டியில் பராசக்தி தத்துவம்

### பெண் சிருஷ்டியில் பராசக்தி தத்துவம்

ஒருமுறை அருள்திரு அம்மா அவர்கள் அருள்வாக்கில், “பெண் பிறவி என்பது பாவமல்ல. பெண் பிறவியில்தான் பராசக்தி தத்துவமே அடங்கியுள்ளது”என்று அருளியிருக்கிறாள்.

சக்தி. ஹர்சிதா செலுக்கா
ஸ்டாவெங்கர், நோர்வே

### பிரபஞ்சத்தாய் - விளக்கம்

இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்து, அது இயங்குவதற்கு சகல ஜீவராசிகளையும், உயிரினங்களையும் படைக்கும்போது முதல் பெண் இனத்தையும், பிறகு ஆண் இனத்தையும் படைத்தாள். எனவே, பரம்பொருள் நம் அனைவருக்கும் தாய் ஆகிறாள். அன்னை ஆதிபராசக்தி அனைவருக்கும் “ஒரே தாய்”. ஆகவே நாம் அனைவரும் “ஒரே குலம்”.

(தொடர்ச்சி 2ஆம் பக்கம்)

## நவராத்திரி இலட்சார்ச்சனை

நமக்காக நாமே வேண்டிக்கொள்வதைவிட நமக்காகப் பிறர் வேண்டுவதும், பிரார்த்தனை செய்வதும், அர்ச்சனை செய்வதும் மிகுந்த பயன் தரும். அத்தகைய பிரார்த்தனைக்குச் சக்தி அதிகம். இந்த வாய்ப்பு இலட்சார்ச்சனை மூலமாக நமக்குக் கிடைக்கின்றது.
நவராத்திரி விழாவின்போது ஆயிரக்கணக்கான மகளிர் சக்திகள் புற்று மண்டபத்திலும் கருவறை மண்டபத்திலும் அமர்ந்து, நமது பெயரைச் சொல்லி, நமது நட்சத்திரம் சொல்லி, “இன்னார் குடும்பம் நலம் பெற, வளம்பெற ஓம் சக்தியே!” என்று சங்கல்பத்துடன் சித்தர் பீடத்தில் இலட்சார்ச்சனை நடைபெறுகின்றது.

### இலட்சார்ச்சனை சங்கல்ப குங்கும அர்ச்சனையின் பலன்கள்:

- குடும்ப வளம், தொழில் வளம் கிடைக்கும், மன நலம் கிடைக்கும்.
- ஏவல், பில்லி, சூனிய, தீய சக்திகளிடமிருந்து பாதுகாப்பு.
- திருமணத்தடை நீங்கும், குழந்தைப்பேறு கிட்டும்.
- கடன் தொல்லை, கிரக தோசத்தில் இருந்து விடுபடுதல்.
- அனைத்து துன்பங்களிலிருந்தும் விடுதலை கிட்டும்.

(தொடர்ச்சி..13ஆம் பக்கம்)

அன்னையின் அருள்வாக்கு:

**“எதையும் கேட்டுக்கொண்டு, பலனை எதிர்பார்த்துக்கொண்டு ஆலயம் வரக்கூடாது.”**

## "ஜோதி"

- ஆன்மிக செய்திச்சுடர்

ஜோதியில் வெளிவரும் ஆக்கங்கள் மூலக்கருப் பொருளான ஆன்மிககுரு அருள்திரு அம்மா உலகுக்குத் தந்த இலகுவழி ஆன்மிகம், மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி அறநிலையின் வெளியீடான 'சக்தி ஒளி' மற்றும் ஆலயம் சார்ந்த ஆக்கங்கள், சக்திகளின் அனுபவங்கள் என பல்வேறு ஆக்கங்களிலிருந்து பெறப்பட்டவையாகும்.

மேற்படி ஆக்கங்கள் தொகுக்கப்பட்டு இலகு வழியாக மக்களிடம் சென்று அடையும் பொருட்டும், அம்மாவின் ஆன்மிகத்தை மக்களிடையே பிரச்சாரம் செய்யும் வகையிலும் சிறு தொண்டாகவே மேற்கொள்ளப் படுகிறது என்பதை வாசகர்களுக்கு அறியத் தருகிறோம்.

முகநூல்(Facebook) சமூக வலைய இணையத்தளத்தினூடாக "ஜோதி" ஆன்மிகச் செய்திச்சுடர் மாத இதழை தரவிறக்கம் செய்யலாம்.

**Search by: "Jothi Newsletter"**

## செய்திச்சுடரில்...

**பெண்சிருஷ்டியில் பராசக்தி தத்துவம்**
Page: 1 – 4

**தொண்டர்கட்கு அன்னை உணர்த்திய பாடம்**
Page: 10 - 12

**UPCOMING EVENTS**
Melbourne: 9, 10, 14
Sydney: 6, 7

**திருமதி அம்மா பதில்கள்**
பக்கம்: 8

**அருள்வாக்கும் அனுபவங்களும்...**
பக்கம்: 6, 7

**Divine Miracles**
Page: 12

**சித்தர்பீட விழாக்கள்**
பக்கம்: 15

**ஆன்மிக நாட்குறிப்பு**
பக்கம்: 16

# பெண் சிருஷ்டியில்...

(முன்பக்க தொடர்ச்சி)

பிரபஞ்சத்தாயைப் பற்றி அருள்திரு அம்மா அவர்களால் தாடிப்பாலகன் என்று அழைக்கப்பட்ட தெ.பொ.மீ.அவர்கள் "மேல்மருவத்தூர் அன்னையின் அற்புதங்கள்" என்ற நூலின் முன்னுரையில் கூறுவதாவது "அவள்தான் ஆன்மா1 அவள்தான் கடவுள்! அவள்தான் மனம்! அவள்தான் உடம்பு! அவள்தான் ஜடம்! இருப்பது ஒன்றுதான்! இதனைப் பிரித்துப் பிரித்துப் பார்த்துப்பேசி மனத்தைக் குழப்பிக்கொள்ளக்கூடாது.

"ஜடத்திலும் அவள்தான் விளையாடுகிறாள். உடம்பிலும் அவள்தான் விளையாடுகிறாள். மனத்திலும் விளையாடுகிறாள். ஆன்மாவிலும் விளையாடுகிறாள்".

பிரபஞ்சத்தாய் கடவுளாக நம் ஆன்மாவில் இருக்கிறாள் என்ற பேருண்மையை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இந்தக் கண் கொண்டு அன்னை ஆதிபராசக்தியின் வடிவத்தை நாம் உணர வேண்டும். பிரபஞ்சத்தில் நடமாடும் ஒவ்வொருவரையும் "அன்னை ஆதிபராசக்தியாகப்" பார்க்கும் மனம் வர வேண்டும்.

## ஒவ்வொருவரையும் அம்மாவாகப் பாருங்கள்

அன்னை ஆதிபராசக்தி குருவடிவாக - ஸ்தூலமாக அவதாரமாகியுள்ளாள். அருள்திரு அடிகளாராக எழுந்தருளி அருள்வாக்கு மூலம் நம்மிடம் நேரடித் தொடர்பு வைத்திருக்கிறாள். அருள்வாக்கு மூலம் நம்மை வழி நடத்துகிறாள். "ஒவ்வொருவரையும் அம்மாவாகப் பாருங்கள்" என்று தெய்வமே நமக்கு உபதேசம் செய்கிறது. எந்தப் பொருளிலுமே உள்ளே நின்று இயங்கி வருபவள் நம்மை உயர்த்த வேண்டி அவ்வாறு கூறுகிறாள்.

"பார்க்கின்ற பொருள் யாவும் தெய்வம் - இயங்குகின்ற ஜடப்பொருள் அனைத்தும் தெய்வம். எழுதுகோல் தெய்வம்! இந்த எழுத்தும் தெய்வம்!"என்று பாரதியார் பாடியுள்ளதை இங்கு நினைவு கூர்வோம்.

ஞானியருக்கு இந்த உலகம் "தெய்வத்தின் இருப்பிடமாகவே" காட்சியளிக்கின்றது. ஒவ்வொன்றையும் கடவுளாகப் பார்க்கும் பழக்கம் நமக்கு வரவேண்டும். அத்தகைய எண்ணம் ஏற்பட்டுவிட்டாலே "நம்முள் புதைந்து கிடக்கும் ஞானத்தை" நாம் வெளிக்கொணர முடியும்.

இந்தக் கருத்தினை எளிய முறையில் நாம் அனைவரும் புரிந்து கொள்ளும்படி பாரதியார் பாடியுள்ளார்.

"காக்கைச் சிறகினிலே நந்தலாலா! நின்றன் கரிய நிறம்
தோன்றுதையே நந்தலாலா!
பார்க்கும் மரங்கள் எல்லாம் நந்தலாலா! நின்றன் பச்சை நிறம்
தோன்றுதையே நந்தலாலா!
கேட்கும் ஒலியில் எல்லாம் நந்தலாலா! ! நின்றன் கீதம்
இசைக்குதடா நந்தலாலா!
தீக்குள் விரலைவைத்தால் நந்தலாலா!நின்னைத்தீண்டும்இன்பம்
தோன்றுதடா நந்தலாலா!

பாரதியார் பாடல் நம் சிந்தனையைத் தூண்டுகிறது அல்லவா? ஆம்! அருள்திரு அம்மா நமக்கு அருளியபடி ஒவ்வொருவரையும் அம்மாவாகப் பார்ப்போம். நாம் மருவூர் பக்தர்களை எங்கே சந்திக்க நேரிட்டாலும் நேரில் சந்திக்கும்போது "வாங்க சக்தி, சொல்லுங்க சக்தி" என்று இருபாலரையும் அழைக்கிறோம்..

(தொடர்ச்சி...3ஆம் பக்கம்)

# பெண் சிருஷ்டியில்...

நாம் ''சக்தி, சக்தி''என்று அழைக்கிறோம். அனைவரையும் அம்மாவாகக் கருத வைத்து ''சக்தி''என்று, அவதாரமாக வந்துள்ள அன்னை நம்மை அழைக்க வைக்கிறாள்.

## பிரபஞ்சத்தாயின் தத்துவம்

அன்னை ஆதிபராசக்தி தான் படைத்த ஆன்மாக்கள் ஓயாத குடிகாரனாகவோ, வஞ்சகச் செயல் செய்பவனாகவோ, பஞ்சமா பாதகம் செய்பவனாகவோ , காம இச்சை கொண்டு அலைபவனாகவோ இருந்தாலும் பாகுபாடு காட்டுவதில்லை. அவர்களுடைய கர்ம வினையைச் சிறிது சிறிதாகத் தன் அவதார காலத்தில் தன் கண்முன்னே கழிய வைப்பதற்காகப் பற்பல வாய்ப்புகளை அளிக்கிறாள். ஒரு சிலரை மனமாற்றம் செய்து நல்ல பாதையைக் காட்டி வாழ்க்கையில் மாற்றம் ஏற்படுத்தியுள்ளாள். ஏற்படுத்தியும் வருகிறாள்.

எல்லோருக்கும் உலக அனுபவத்தைக் கொடுத்து கீழ்நிலை அனுபவங்களையெல்லாம் விட்டுவிட்டுக் கடவுள் அனுபவத்தோடு கூட்டவேண்டும் என்பதுதான் பிரபஞ்சத்தாயின் நோக்கம் ஆகும்.

தான் படைத்த ஆன்மாக்கள் அனைத்தையும் சமநோக்குடன் பார்க்கிறாள். ஆம்! சைவ மதத்தினர், வைணவ மதத்தினர், கிறிஸ்துவ மதத்தினர், இஸ்லாம் மதத்தினர் என்ற பாகுபாடு சித்தர் பீடத்தில் இல்லை.

தான் படைத்த ஆன்மாக்கள் எல்லோரையும் இங்கு ஒன்றாகக் கூட்டி ஒரு சேரப் பார்க்கிறாள். ஏனென்றால் ஒவ்வொருவரிடமும் அவளே ஆன்மாவாக இருந்து செயல்படுகிறாள். பிரபஞ்ச ''ஆன்மாக்களின் சங்கமத்தினை'' மருவூர் அவதார பூமியில் மட்டும்தான் நாம் காண முடிகிறது.

சித்தர்கள் தவம் செய்த புண்ணிய பூமி இது. தவம் செய்த சித்தர்கள் இங்கே ஜீவசமாதியாக உள்ளனர். சித்தர்கள் மதம் கடந்தவர்கள் அன்னையின் அருளால் முக்தி பெற்று இங்கே அன்னையிடம் ஒடுங்கி அன்னையின் பணியினைச் செய்கிறார்கள்.
ஜாதி, மதம், இனம், மொழி, ஏழை பணக்காரன் என்ற பாகுபாடு இல்லாமல் அனைத்துக் குடும்பத்தைச் சார்ந்தோர் எல்லாம் இங்கே ஒன்று கூடுகின்றனர். அன்னை ஆதிபராசக்தி நம் அனைவரின் தாய் என்பதால் இவ்வாறு கூடுகிறோம்.

## நம்மைப் பெற்ற தாயின் சமநோக்குப் பார்வை

பிரபஞ்சத் தாயான அன்னை ஆதிபராசக்தியின் தத்துவத்தையும், அன்னையின் பாகுபாடு காட்டாத தன்மையையும் பார்த்தோம். பராசக்தி தத்துவத்தில் உருவாக்கப்பட்ட ''பெண் குலத்தைப்'' பற்றி இனி பார்ப்போம்.

ஒவ்வொரு தாயும் பத்து மாதம் குழந்தையைக் கருவில் சுமந்து பிரசவிக்கிறாள். அன்பையும் பாசத்தையும் கொட்டி வளர்க்கிறாள். குழந்தையின் ஒவ்வொரு அசைவு மூலமாகக் குழந்தையின் தேவைகளை தாயானவள் அறிந்து கொள்கிறாள்.

இன்றைய மகளிர் ஒரு குழந்தையையோ அல்லது இரண்டு குழந்தையையோ பெற்று நன்கு வளர்க்க விரும்புகின்றனர்.

அறுபது எழுபது வருடங்களுக்கு முன்பெல்லாம் அன்றைய தாய்மார்களில் பெரும்பான்மையோர் ''ஆறு முதல் பத்து'' குழந்தைகள் பெற்றெடுத்ததாக அறிகிறோம்.

ஒரு தாய் தனக்கு எத்தனை குழந்தைகள் இருந்தாலும் பாகுபாடு காட்டாமல் வளர்க்கிறாள். வெவ்வெறு வேலை, வெவ்வேறு வருமானம் இருந்தபோதும் சமநோக்குடன் அணுகித் தான் காட்டும் பாசத்தில் குறை வைப்பதில்லை.

பால் குடிக்கிற குழந்தைக்கும் காளைப் பருவத்தில் இருக்கும் பிள்ளைக்கும் ஒரே மாதிரியான உணவை ஒரு தாய் கொடுக்க முடியாது. குழந்தைக்குப் பாலும் காளைக்குச் சோறும் கொடுப்பாள். அதுவும் தேவையான அளவுக்குக் கொடுப்பாள்.

தேவையான அளவு, தேவையான உணவு, அவர் அவர்களுக்குத் தகுந்த உணவு என்று பகுத்தறிந்து அளிப்பது ஒவ்வொரு தாயின் கடமையாகும்.

தன் குழந்தைகளை ஒரே மாதிரியாக அரவணைக்கிறாள். இப்படிப்பட்ட நிலையில் ''ஒரு பெண்'' பிரபஞ்சத் தாயின் நிலையிலே இருப்பதை நாம் உணர முடிகிறது. ஏனென்றால் பெண் சிருஷ்டியில் ''பராசக்தியின் தத்துவம்'' அடங்கிள்ளது.

(தொடர்ச்சி...4ஆம் பக்கம்)

# பெண் சிருஷ்டியில்...

## பிரபஞ்சத்தாய் - பெற்ற தாய்

பிரபஞ்சத்தைப் படைத்து இயக்கும் பரம்பொருள் "பிரபஞ்சத்தின் காவல் தெய்வம்" ஆவாள். பெண் (பெற்ற தாய்) "வீட்டைக்காக்கும் காவல் தெய்வம்" ஆகிறாள்.

குழந்தையின் தேவைகளை அறிந்து தேவையானவற்றை உடனே அளிப்பது பெற்ற தாயின் கடமையாகிறது.

பிரபஞ்சத் தாய் தம் தேவைகளையெல்லாம் அறிவாள். இருப்பினும் நாம் வேண்டத்தக்கதை, காலம் - நேரம் அறிந்து, நமக்கு அளிப்பாள்.

பிரபஞ்சத் தாய் ஜீவாத்மாவாக இருந்து நம்மை இயக்குகிறாள். பிரபஞ்சம் முழுவதும் அங்கிங்கெனாதபடி எங்கும் இருந்து கொண்டு நாம் புரியும் ஒவ்வொரு செயலையும் பார்த்து அதற்கேற்றபடி நம்மை இயக்குகிறாள்.

ஆம்! செயலைச் செய்வதும் அவளே! செய்ய வைப்பதும் அவளே! கல்லால் அடிப்பதும் அவளே! கல்லால் அடிபடும் உடலில் ஆன்மாவாக இருந்துகொண்டு கல்லின் அடியைப் பெறுகிறாள். அனைத்தும் அவளே! அனைத்திலும் அவளே! இயக்குபவளும் அவளே! இயங்குபவளும் அவளே!

நம்மைப் பெற்ற தாயும் தன் "நேரடிப் பார்வையில்" நம்மை வளர்க்கிறாள். நாம் செய்ய வேண்டிய செயல்களை அவ்வப்பொழுது அறிவுறுத்திச் செய்ய வைக்கிறாள்.

தன் குழந்தையின் கஷ்ட நஷ்டங்களைப் பார்த்துத் தன் பங்கிற்கு என்ன செய்ய வேண்டுமோ அதனைப் பெற்ற தாய் செய்கிறாள்.

பராசக்தியின் தத்துவம் பெண்ணிடம் இருக்கிறது என்பது நமக்கு நன்கு தெளிவாகிவிட்டது. எனவே பெண்ணை இலக்காக வைத்து அன்னை ஆதிபராசக்தி தன் அவதார நோக்கத்தைச் செயல்படுத்தி வருகிறாள்.

"சிறப்பான குணாதிசயங்களுடன் மானிட இனத்தில் மகளிரைப் படைத்து வம்சத்தை விருத்தியடையச் செய்துள்ளாள். வம்சத்தை விருத்தியடையச் செய்த பரம்பொருள் மகளிரை இலக்காக வைத்து ஆன்மிகத்தில் ஏற்பட்ட தொய்வை நீக்கி வருகிறாள். மலரைப் போன்று மென்மையானவள் பெண் என்பதால் தன்னுடைய குணாதிசயங்களையெல்லாம் மகளிரிடம் படிப்படியாக வளரச் செய்கிறாள். பெண் ஓர் அற்புதப் படைப்பு என்பதில் எந்தவித கருத்து வேறுபாடும் நமக்கு இல்லை.

உலகமெல்லாம் சக்தி நெறியைப் பெண்ணை இலக்காக வைத்து அன்னை ஆதிபராசக்தி வளர்த்து வருகிறாள்.

தாய் வாழ்க! தாய்மை வாழ்க! தாய்க்குலம் வாழ்க!
ஓம் சக்தி!

# "வேள்விப்பூசை, வழிபாடு"

## அன்னையின் அருள்வாக்கு

### வேள்வியும் பயனும்

"இங்கே நடைபெறுகிற வேள்வியைப் பார்த்து அமைதியாக இருந்தாலே உங்கட்குப் பயன் உண்டு. தியானம் செய்த பலன், யோகம் செய்த பலன் உண்டு. இந்த மந்திர ஒலிகள் உங்கள் உடம்பின் மேல் பட்டால் பெரும் பயன் உண்டு."

### கலச விளக்குப் பூசைகளை முறை தவறிச் செய்யக் கூடாது


"கலச விளக்கு வேள்விப் பூசைகளை எப்போது யார் செய்தாலும் மழை வரும் என்று நினைத்துக் கொள்ளக் கூடாது. அடிகளார் அனுமதியுடனும் பக்தியுடனும் நான் அருளிய வழிமுறைகளுடனும், முறைப்படியும் செய்தால்தான் பலன் கிடைக்கும். வேள்விப் பூசைகளை வியாபாரமாக ஆக்கக் கூடாது."

***

# Sydney - Mandrams - Upcoming Events – September 2016

## Homebush





**மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீட சிட்னி சென்டர்**

**Melmaruvathur Athiparasakthi Sithar Peeta Sydney Centre**

Contact: 02-97643872, 0416217317

**Weekly Prayers - Every Friday: 7.30p.m. – 9.00p.m.**

Homebush High School (Gymnastic Hall)
Bridge Road, Homebush 2140

| | | | |
|---|---|---|---|
| 02.09.2016 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 09.09.2016 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 16.09.2016 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja “பௌர்ணமி விளக்குப் பூஜை” |
| 23.09.2016 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 30.09.2016 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

**ஆன்மிககுரு**

**அருள்திரு அடிகளார் அருளிய**

# குரு உபதேசங்கள்



## ஆன்மிகம் தான் ஆணி வேர்: அம்மா தான் ஆணி வேர்

“ஒரு மரத்திற்கும் ஆன்மா உண்டு. ஒரு மாமரத்தில் மாம்பழத்துக்கு மதிப்பா? அதன் கிளைகட்கும் இலைகட்கும் மதிப்பா? அதன் ஆணிவேர்க்குத் தான் மதிப்பு! அது பலமாக இருந்தால்தான் மற்றவைக்கு மதிப்பு. ஆன்மிகம்தான் நமக்கு ஆணி வேர்! அம்மாதான் நமக்கு ஆணி வேர்! இந்தா வேர்தான் நமக்கும் பலம்!”
அம்மாவைப் பற்றிக்கொண்டு நாம் ஆன்மிகத்தில் வளர வேண்டும்.”

## எல்லாமே மாறிவிட்டது

“ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும் என்பது பழமொழி, இன்றைக்கு எல்லாமே மாறிவிட்டது. அந்தப் பழமொழி எழுந்த காலத்தேயிருந்த ஆன்மிக மோகம் குறைந்து விட்டது. சினிமா மோகம் அதிகரித்துவிட்டது!”

## இனிப்பும் கசப்பும்

“சர்க்கரை இனிப்பு! இனிப்பே உண்டால் உடம்பு கெடும். சர்க்கரைக்கு மாற்று கசப்பு! நமக்குக் கசப்பும் வேண்டும். உணவைப் பொறுத்த வரையில் நமக்கு வாய்க்கட்டுப்பாடு தேவை. மனக்கட்டுப்பாடு தேவை. மனக்கட்டுப்பாட்டிற்குத் தியானம் தேவை!”

# அருள்வாக்கும் அனுபவங்களும்....

## அறிவு ஆராய்ச்சிக்கு அப்பால்...

"என்னையும் என் வழிமுறைகளையும் ஆராயாதே! அவை உங்கள் அறிவுக்கு எட்டா" என்கிறாள் அன்னை.

சாதாரண மனிதர்களாகிய நாமே ஒருவரையொருவர் புரிந்து கொள்ளாமல் அவதிப்படுகிறோம். நம்மைச் சுற்றியிருப்பவர்களை நாம் நன்றாகப் புரிந்துகொள்ளும் ஆற்றல் வந்துவிட்டால் உலகில் போராட்டமில்லாமற் போய்விடும். எத்தனை ஆண்டுகள் நெருக்கமாக வாழும் கணவன் - மனைவி இருவருங்கூட ஒருவரையொருவர் புரிந்து கொள்ள முடியாமல் சிக்கல்கள் ஏற்படுகின்றன. நம்மைப் போன்ற சிற்றறிவுடைய மக்களையே நம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை என்றால், பேராற்றல் படைத்த பரம்பொருளின் நோக்கத்தையும், செயல்களையும் எவ்வாறு புரிந்துகொள்ள முடியும்? புரிந்துகொள்ள முடியவில்லை என்ற காரணத்திற்காக ஒன்றை நம்பாமல் இருக்கத் தொடங்கினால் உலகத்தில் பலவற்றை நம்பாமல் விட்டுவிட நேரிடும். நம் அறிவிற்குப் புலப்படாதவை, அப்பாற்பட்டவை எனப் பல விஷயங்கள் உண்டு. அவற்றை ஏற்பதைத் தவிர வேறு வழி இல்லை என்றே இன்றைய விஞ்ஞானமும் ஏற்றுக்கொள்கிறது.

இரண்டு நண்பர்கள் பகைமை கொண்டு ஒருவரையொருவர் எதிர்த்துப் போராடத் தொடங்கிவிட்டனர். இவர்கள் யாருமே கோயிலுக்கு வராதவர்கள். இவர்கள் இருவரின் பகையாலும் போராட்டத்தாலும், இவர்கள் மட்டுமின்றி, இவர்கள் குடும்பங்களுமே அவதிப்பட நேரிடுமே என்று அவர்தம் நண்பர்கள் அஞ்சினார்கள்.

அந்த இருவரில் ஒருவர் அதிகமான தவறு செய்பவர். நியாயத்திற்குக் கட்டுப்படாதவர். பிடிவாதக்காரர். இன்னொருவர் எந்த வம்பு தும்புக்கும் போகாதவர். விட்டுக்கொடுக்கும் குணம் உடையவர். அதனால் ஏற்படும் இழப்பையும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருப்பவர். அந்த இருவரின் பகைமை நீதிமன்றத்திற்கு வந்துவிடுமோ என்ற சூழ்நிலை.

அந்த இருவருக்கும் வேண்டிய அன்பர் ஒருவர்: அவர் அன்னையின் ஆலயத்தில் தொண்டராக இருப்பவர். இந்த இருவரையும் சமாதானப்படுத்த முடியாமல் தவித்தார்.

பிடிவாதக்காரரான அவரை அன்னையிடம் அழைத்து வந்தால் மனம் மாறமாட்டாரா என்றெண்ணி அவரை முதலில் அழைத்துக்கொண்டு வந்தார் அந்த ஆலயத் தொண்டர். அருள்வாக்கு கேட்க அனுப்பி வைத்தார். அம்மா அவருக்கு நல்ல சூடு கொடுத்து அவர் மனத்தை மாற்றியனுப்புவாள் என்பது ஆலயத் தொண்டரின் எதிர்பார்ப்பு.

அருள்வாக்கு கேட்கப்போன அன்பர் வெளியே வந்தார். அம்மா என்ன சொன்னாள்? என்று தொண்டர் விசாரித்தார்.

"உன் பக்கம் நியாயம் இருக்கிறது. தொடர்ந்து போராடு! நீதி மன்றத்தில் வழக்குப்போடு! என்று என்று அம்மாவே உத்தரவு கொடுத்துவிட்டது" என்று எக்களிப்போடு கூறினார். "இனி அம்மாவைக் கேட்டுக் கொண்டுதான் எதையும் செய்யப்போகிறேன்" என்றார்.

அதுகேட்ட ஆலயத் தொண்டருக்குத் தலைசுற்றியது. அக்கிரமத்திற்கும், அநியாயத்திற்கும் அன்னையே துணைபோகிறாளே.. இதற்காகவா இவரை அன்னையிடம் அழைத்து வந்தோம்? என்று வருந்தினார்.

அதன்பிறகு அந்த அன்பர் அடிக்கடி ஆலயத்திற்கு வர ஆரம்பித்தார். அன்னையின் ஆணைப்படி வக்கீல் நோட்டீஸ் விடுவதற்கும் தயார் செய்துவிட்டார்.

இந்நிலையில் அவரை ஆலயத்துக்கு அழைத்து வந்த ஆலயத் தொண்டர் அன்னையிடம் சென்று "தாயே! நான் அழைத்து வந்தவர் தவறான பாதையில் போகிறார். அக்கிரமமாக அடுத்தவர் மேல் வழக்குத் தொடுக்கப் போகிறார். அவர் மனத்தை மாற்றி, இருவருக்கும் சமாதானம் செய்து வைப்பாய் என்ற எண்ணத்தில்தானே உன்னிடம் அழைத்து வந்தேன்? நீயே அவரை உசுப்பிவிட்டாயே... இனி அவர் உன் பெயரைச் சொல்லிக்கொண்டு தன் வழியே செல்லத் தொடங்கிவிட்டாரே.. உன்னைத் தவிர வேறு வழியில்லை என்றுதானே நான் இந்தக் காரியத்தில் இறங்கினேன். என்னைப் பரிதாப நிலைக்குக் கொண்டு வந்துவிட்டாயே..?" என்று புலம்பினார்.

அவர் கூறிய அனைத்தையும் பொறுமையாகக் கேட்ட அன்னை "மகனே! என்னிடம் அதிக நம்பிக்கை வைத்துத்தானே அவனை அழைத்து வந்தாய்? நீ என்ன விரும்பினாய்? அவன் மனத்தை மாற்றி நல்வழிப்படுத்த வேண்டும் என்றுதானே விரும்பினாய்? அதனைச் செய்து தருகிறேன்.

ஆனால், நான் மேற்கொள்ளும் வழிகளை நீ ஆராயத் தொடங்காதே! நீ விரும்புகிற முடிவினையே செய்து தருகிறேன். ஆனால் அந்த முடிவைப் பெற நீ நினைக்கும் வழிதான் சரியானதென்று நீ நினைக்கிறாய். அதனால்தான் வீண் குழப்பமடைகிறாய்.

(தொடர்ச்சி...7ஆம் பக்கம்)

# அருள்வாக்கும் அனுபவங்களும்....

இப்போது உனக்குக் காரணத்தைக் கூறுகிறேன். கவனமாகக் கேட்டுக்கொள். ஆனால் அதை வெளியே சொல்லாதே.

“நீ அழைத்து வந்தாயே... அவன் முன்பின் என் ஆலயத்துக்கு வராதவன். நீ வரச் சொன்னதால் வந்தான். அவனுக்கு என்னிடம் கடுகளவுகூட நம்பிக்கை கிடையாது. இந்நிலையில் உன் பக்கம் நியாயமில்லை என்று நானும் அவனிடம் சொல்லியிருந்தால் மறுநாள் இந்தப் பக்கமே அவன் வரமாட்டான். அவன் பக்கமே நான் பேசியதால் அவனுக்கு இப்போது என் மீது நம்பிக்கை வளர்ந்து வருகிறது. எத்தனை முறை அவனாகவே கோயிலுக்கு வருகிறான் பார்! பார்க்கிறாயல்லவா? அந்த நம்பிக்கையை மேலும், மேலும் வளர்த்து வருவேன். நான் யார் என்பதை அவன் ஓரளவு புரிந்துகொள்ள வழிசெய்வேன். நான் என்ன சொன்னாலும் தட்டாமல் செய்யும் நிலைக்குக் கொண்டு வருவேன்.

நாய் வாலை நிமிர்த்த முடியாது என்றுதான் உலகம் சொல்கிறது மகனே! நீகூட அப்படித்தான் அவனைப் பற்றி நினைத்தாய். அந்த நிமிர்த்த முடியாத வாலையும் நிமிர்த்திக் காட்டுகிறேன் பார்! அவன் என் சொல்படி நடக்க முடிவு செய்யும் அன்றைக்கு உன் கருத்தை நிறைவேற்றி வைக்கிறேன். நீ வேடிக்கை பார்த்துக்கொண்டிரு!

நான் மேற்கொள்ளும் வழிகளை ஆராயாதே! அது உன் அறிவுக்கு அப்பாற்பட்டது. கவலையில்லாமல் இரு!”என்று அறிவுரை கூறியனுப்பினாள் அன்னை.

அந்த அன்பரோ, அன்னையின் ஆணையைப் பெற்றுவிட்டதாகச் சொல்லிக்கொண்டு தன் காரியத்தில் முன்னேறிக்கொண்டிருந்தார். நான்கு மாதங்கள் கடந்தன. நான்கு மாத முடிவில் எப்படி அவருக்கு அந்த மனமாற்றம் ஏற்பட்டது? தெரியவில்லை! பெரிய வியப்பாக இருந்தது.

திடீரென்று அவரே தன் விரோதியிடம் சென்று மன்னிப்பு வேண்டினார். தான் செய்த பிழைகளையெல்லாம் எடுத்து அடுக்கடுக்காய் கூறினார். “நான் இதுவரை செய்த பிழைகளையெல்லாம் மறந்து மன்னித்துவிடுங்கள்” என்று மன்றாடினார்.

அதைவிட இன்னொரு சிறப்பு என்ன தெரியுமா?

எவர்மேல் வழக்குப்போட்டு ஒருகை பார்க்கிறேன் என்று கங்கணம் கட்டிக்கொண்டு அலைந்தாரோ அவரையும் இவரே அன்னையின் கோயிலுக்கு அழைத்துக்கொண்டு வந்துவிட்டார். அந்த இருவரும் ஒன்றாகச் சேர்ந்து அன்னையிடம் அருள்வாக்கு கேட்கப்போனது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

ஆலயத் தொண்டர் அந்தக் காட்சியைக் கண்டு அன்னையின் கருணையையும், அவளுடைய பேராற்றலையும் எண்ணியெண்ணி வியந்து ஆனந்தக் கண்ணீர் விட்டார்.

எத்தகைய மாபெரும் காரியத்தையும் அன்னை சாதித்துவிடுவாள் என்பதை இந்நிகழ்ச்சி உணர்த்துகிறது.

**மனிதர்களுடைய மனத்தை அடியோடு மாற்றுகிற சித்துதான் இவளுடைய திருவிளையாடல்களில் மிகச்சிறப்பானதாகும்.**

ஆக்கல், அழித்தல், அருளல் என்ற மூன்றையும் விளையாட்டாகவே செய்யும் இந்தப் பெருமாட்டி, எந்த வழியை மேற்கொண்டு எவ்வாறு முடிக்கிறாள் என்பதை மட்டும் நம்மால் அறிய முடியாது.

**புதிய பரிணாம வளர்ச்சியில் ஆதிபராசக்தி இணையத்தளம்**

**ஆன்மிக விடைதேடும் அதிக பக்தர்களின் மனதைக்கவர்ந்த**

**www.adhiparasakthi.co.uk ஆதிபராசக்தி இணையத்தளம்**

**“ஜோதி” ஆன்மிகச் செய்திச் சுடரை www.adhiparasakthi.co.uk என்ற இணையத்தளத்தின் ஊடாக பதிவிறக்கம் செய்து வாசித்து பயன்பெறலாம்.**

ஜோதி ஆன்மிகச் செய்திச்சுடர்

# Sydney - Mandrams - Upcoming Events – September 2016



**Melmaruvathur Swayambu Arulmihu Annai Athiparasakthi Sitherpeedam NSW Mandram (Australia)**

Contact: 02-96420519, 0439686452



**Every Friday : 7.30p.m. – 9.30p.m.**

Westmead Public Primary School
Moree Street – Westmead

| | | | |
|---|---|---|---|
| 02.09.2016 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 09.09.2016 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 16.09.2016 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja “பௌர்ணமி விளக்குப் பூஜை” |
| 23.09.2016 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 30.09.2016 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |



# திருமதி அம்மா பதில்கள்

- திருமதி இலட்சுமி பங்காரு

*அம்மா ! மனசாட்சி எப்போது உறங்குகிறது? எப்போது விழிக்கிறது..?*

மனசாட்சி என்பது சினிமாவில் வருவதுபோல அவரவர் உருவமாக எதிரில் வந்து பேசாவிட்டாலும் நல்லது எது? கேட்டது எது? என்பதை உடனுக்குடன் உணர்த்திக்கொண்டேதான் இருக்கும். கடுமையான கோபம், தன்னலம், **தான்** என்ற அகம்பாவம், எது நடந்தாலும் பார்த்துக்கொள்ளலாம் என்ற அசட்டுத் தைரியம், முரட்டுத்தனமான துணிச்சல் ஆகிய உணர்வுகள் மேலோங்கி, மென்மையான உணர்வுடைய மனச்சாட்சியைச் சில சமயங்களில் அழுத்தி உறங்க வைத்து விடுகிறது. பிறந்து, வளர்ந்து குறிப்பிட்ட பருவம் வந்தவுடன் நல்லது, கெட்டதை உணர ஆரம்பிக்கும் போதே மனசாட்சியும் வேலை செய்ய ஆரம்பிக்கிறது. தீய உணர்வுகள் மேலோங்கும்போது, தீய குணங்கள் வளர்கின்றன. அப்போதுதான் சில சமயங்களில் உறக்கம் வராத குழந்தையை நம் வேலை முடிய வேண்டும் என்ற காரணத்திற்காக, கவிழ்த்துப்போட்டு, தட்டி, பாட்டுப்பாடி உறங்க வைப்பதுபோல, நாம் நினைத்த காரியம் நடக்க வேண்டும் என்ற வெறி உணர்வால் மனசாட்சியை அடக்கி உறங்க வைத்து விடுகிறோமே தவிர, மற்றபடி மனசாட்சி உறங்குவதில்லை. எப்போதும் விழித்துக்கொண்டுதான் இருக்கும். நாம் நிரந்தரமாக உறங்கும்போதுதான், அதுவும் உறங்கும்.

# Melbourne - Mandrams – Upcoming Events – September 2016

## Melmaruvathur Swayambu Arulmihu Athiparasakthi Vaara Valipaattu Mandram
## மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம்

(Reg. No. 2193)
விக்டோரியா – அவுஸ்திரேலியா

P.O.Box: 5217, Clayton, Victoria 3168, Australia - E-mail: melbourne.mandram@gmail.com
Contacts / மன்ற தொடர்புகளுக்கு: 0433440194 - Facebook : : https://www.facebook.com/MM2193

## கூட்டு வழிபாடுகள்:

**Clarinda – வெள்ளி - Friday:**
**Melaleuca Activity Hub,**
31 Melaleuca Drive
Clarinda 3169
(Mel.Ref.: 78 K 3)

**Dandenong - ஞாயிறு – Sunday:**
**Latham Crescent Centre**
Cnr of Latham Cr. & Deakin Cr.-
Dandenong3175
(Mel.Ref.: 90 C 01)

| | | | | |
|---|---|---|---|---|
| Clarinda - 02.09.2016 | Friday | ஆவணி | 17 | Joint Prayer – கூட்டு வழிபாடு - 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 04.09.2016 | Sunday | ஆவணி | 19 | Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm |
| Clarinda - 09.09.2016 | Friday | ஆவணி | 24 | Joint Prayer – கூட்டு வழிபாடு – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 11.09.2016 | Sunday | ஆவணி | 26 | Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm |
| Clarinda - 16.09.2016 | Friday | ஆவணி | 31 | Joint Prayer – கூட்டு வழிபாடு - 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 18.09.2016 | Sunday | புரட்டாதி | 02 | Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm |
| Clarinda - 23.09.2016 | Friday | புரட்டாதி | 07 | Joint Prayer – கூட்டு வழிபாடு – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 25.09.2016 | Sunday | புரட்டாதி | 09 | Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm |
| Clarinda - 30.09.2016 | Friday | புரட்டாதி | 14 | Joint Prayer – கூட்டு வழிபாடு - 7.30p.m. – 9.00p.m. |

**01.09.2016 – வியாழன் - அமாவாசை, 16.09.2016 – வெள்ளி - பௌர்ணமி**
**30.09.2016 – வெள்ளி - அமாவாசை**
**01.10.2016 - சனி - நவராத்திரி ஆரம்பம்**



## Melbourne - Mandrams – Upcoming Events – September 2016

**Athiparasakthi Mandram Melbourne Australia (AMMA)**

Contact: +61 451 374 878, +61 433 326 620

contactus@supremesakthi.com

www.supremesakthi.com

**Joint Prayers:** Every 3rd Sunday of the month

**Thiruvilakku Poojai:** Every month on the Sunday following the Full Moon day

**Southern Community Centre,**
Rupert Drive - Mulgrave 3170 (Mel.Ref:: 80 F 5)

| | | | |
|---|---|---|---|
| **21.09.2016** | **Sunday** | **09.00a.m.**<br>**06.10p.m.** | Guru, Vinayagar, Annai Pooja, Chakkaram drawing<br>**"Thiru Vilakku Pooja"**<br>**"திருவிளக்குப் பூஜை"** |

# தொண்டர்கட்கு அன்னை உணர்த்திய பாடம்

## செவ்வாடைத் தொண்டர்களின் அறியாமை

ஆரம்ப நாட்களில் செவ்வாடைத் தொண்டர்கட்கு அடிகளார் அவர்களின் அருமை பெருமை தெரியாது. அன்னை அடிகளார் திருமேனியை வயமாக்கிக்கொண்டு அருள்நிலையில் வந்த பிறகு மட்டுமே அன்னையின் திருவடிகளில் விழுந்து வணங்குவது வழக்கம். மற்ற நேரங்களில் அடிகளாரைக் கண்டு கொள்வது இல்லை!

## வெறும் மீடியம் தானே...

அடிகளார் வெறும் கருவி தானே..? அவர் ஒரு மீடியம் தானே! அவரும் நம்மைப் போன்றவர்தானே என்ற எண்ணம் பலர் மனத்தில் மேலோங்கி இருந்தது.

**வேம்பு**

உலகத்தில் எத்தனையோபேர் இருக்க அடிகளாரை மட்டும் வயப்படுத்திக்கொண்டு அன்னை ஆதிபராசக்தி வெளிப்படுகிறாளே.. அவர் மூலமாக அருள்வாக்கு அளிக்கிறாளே.. அப்படியானால் அவர் எத்தகைய உன்னதமான நிலையில் இருக்க வேண்டும்? என்ற எண்ணம் மட்டும் அந்த நாள் தொண்டர்கள் மனதில் உதிக்கவில்லை. ஏதோ அம்மன் இவர் மூலமாகக் குறி சொல்கிறது என்று மட்டுமே அறிந்து வைத்திருந்தார்கள் அவர்கள்.

## ஓர் ஆடிப்பூர விழாவின்போது...

செவ்வாடைத் தொண்டர்களின் அறியாமையைப் போக்கவேண்டி அன்னை ஒரு சித்தாடலை நிகழ்த்தினாள். ஓர் ஆடிப்பூர விழாவன்று நடந்தது அது.

ஒவ்வொரு ஆடிப்பூர விழாவன்று அடிகளார் நீராடிவிட்டு செவ்வாடை அணிந்து சந்நிதியைச் சுற்றி வலம் வந்து முடித்துவிட்டுக் கருவறை முன் மண்டபத்துக்கு வரும்போது அறநிலையினர் அவருக்கு மாலை அணிவித்து விழாவைத் தொடங்குவது வழக்கம்.

பின்னர் அடிகளார் அன்னையின் சந்நிதிக்குள் சென்று கற்பூரம் ஏற்றி வைப்பார். மின்னும் புவிக்கெல்லாம் எனும் வேண்டுதற்கூறு பாடல்கள் பாடப்படும். அதன்பிறகு அவரை வயமாக்கிக்கொண்டு அன்னை வெளிப்படுவாள். வீழா நடத்துவது எப்படி என்று அறநிலையினருக்கு வாக்கு கூறுவாள்.

(தொடர்ச்சி..11ஆம் பக்கம்)

# தொண்டர்கட்கு...

வேள்வி முறைகளைப் பற்றிக் கூறுவாள். வேள்விச் சக்கரத்தில் உள்ள குற்றம் குறைகளைக் கூறி திருத்தம் செய்யச் சொல்வாள். பின்னர் இரண்டொரு வேப்பிலைகளைக் கிள்ளித் தூவி ஆசி வழங்கிவிட்டு வேள்வியைத் தொடங்கும்படி ஆணை வழங்குவாள்.

வேள்வி முடியும் வரை யாகசாலையைச் சுற்றிச் சுற்றி வருவாள். மந்திரம் படிப்பவர்கள் இரவு 2.00 மணி முதலே தயாராகிவிட வேண்டும். விடியற்காலம் மிக ரம்மியமான நேரம். சிலருக்குத் தூக்கம் கண்களைத் தழுவும். யாராவது மந்திரம் படிப்பவர்கள் தூங்கி வழிந்தால் வேப்பிலையால் அடித்து உணர்த்துவாள்.

எவ்வெப்போது எங்கெங்கே திருஷ்டி கழிக்க வேண்டும்? எத்தனை பூசணிக்காய்? எத்தனை எலுமிச்சம் பழம் கொண்டு திருஷ்டி கழிக்க வேண்டும் என்பதையெல்லாம் சைகைகளால் உணர்த்துவாள். இதற்கென்றே இரண்டு மூன்று செவ்வாடைத் தொண்டர்கள் அன்னையின் கட்டளைகளை எதிர்பார்த்து, அவற்றையெல்லாம் நிறைவேற்ற எங்களைச் சுற்றி வந்தபடி இருப்பார்கள்.

இதெல்லாம் வழக்கமான முறை.

## அடிகளாரை எழுப்பச் சென்ற பஸ் நடத்துனர்

அந்தக் குறிப்பிட்ட ஆடிப்பூரத்தன்று விடியற்காலை நேரம், அடிகளாரை எழுப்பி, அவருக்குக் காபி கொண்டு போய்க்கொடுக்க எண்ணி, அங்கிருந்த கடையில் காபி வாங்கிக்கொண்டு, அடிகளார் தங்கியிருந்த அறையை நோக்கிச் சென்றார் தொண்டர் ஒருவர். அவர் பஸ் நடத்துனராக(கண்டக்டர்) இருப்பவர்.

தற்போது சித்தர் பீடத்தின் மூலையில் இருக்கும் கிணற்றின் அருகே இருந்த மோட்டார் பம்பு செட் இருக்கும் அறைதான் அடிகளார் அறை.

அந்தக் கண்டக்டர் காபி வாங்கி வருகிற வேளையில், அடிகளார் ஈரச் செவ்வாடையுடன் கோயிலைச் சுற்றுவதற்குப் புறப்பட்டு விட்டார். அம்மன் வரப் போகிற நேரம் என்பதற்கு இது அடையாளம். எப்படி காபி கொடுப்பது என்று புரியாத அவர், சரி, இதனை அடிகளார் அறையில் வைத்து விடலாம் என எண்ணி அறைக்குள் கொண்டு போக அந்த அறையில் அவர் கண்ட காட்சி அவரை பிரமிப்பும் அதிர்ச்சியும் அடைய வைத்தது. ஆம். அங்கே அடிகளார் வெள்ளைச் சட்டை அணிந்தபடி அப்போதுதான் தூங்கி எழுந்து உட்கார்ந்து கொண்டிருந்தார்.

## ஒரே நேரத்தில் இரண்டு அடிகளார்...

அப்படியானால் சற்று முன்பு ஈரச் செவ்வாடையுடன் கோயிலை வலம்வரப் புறப்பட்டுப் போன அடிகளார் யார்?

ஒரே சமயத்தில் இரண்டு அடிகளார் தென்படுவது எப்படி? அவருக்கு ஒன்றும் புலப்படவில்லை. மிரள மிரள விழித்த அந்த பஸ் கண்டக்டர் அதிர்ச்சி அடைந்து பயந்து போய் போய் செங்கல்பட்டு பஸ் ஏறி வீட்டிற்குப் போய் விட்டார். அம்மாவே அவரை அப்படிப் போகச் செய்துவிட்டாள் போலும்.

வழக்கம் போல ஆடிப்பூர விழா நிகழ்ச்சிகள் தொடர்ந்தன.

காலை 10.00 மணி அளவில் மீண்டும் அம்மா அடிகளாரை வயமாக்கிக்கொண்டு வெளிப்பட்டாள், தொண்டர்கட்கு அருள்வாக்கு நல்கினாள்.

இன்று ஒரு சித்தாடல் புரிந்தேன்! யாருக்காவது தெரியுமா?

அம்மா அருள்வாக்கில் தொண்டர்களை நோக்கிக் கேட்டாள்.

மகனே! இன்று விடியற்காலை நான் ஒரு சித்தாடல் புரிந்தேன். யாருக்காவது தெரியுமா?

தொண்டர்கள் மலங்க மலங்க விழித்தார்கள்.

(தொடர்ச்சி... 12ஆம பக்கம்)

## தொண்டர்கட்கு...

பிறகு அம்மா தொடர்ந்தாள். நீங்களெல்லாம் நான் பாலகன் மூலமாக அருள் நிலையில் வரும்போது மட்டும் விழுந்து வணங்குகிறீர்கள். பாலகன் சாதாரணமானவன் அல்ல என்பதை உணர்த்துவதற்காக ஒரு சித்தாடல் புரிந்தேன்.

இன்று விடியற்காலை, பாலகனை அவன் அறையில் இருக்க வைத்துவிட்டு அவன் உருவத்தில் நானே ஆலயத்தைச் சுற்றி வந்தேன். நீங்கள் அணிவித்த மாலையை நானே ஏற்றுக்கொண்டேன். இன்று என் திருவடிகளில் விழுந்து வணங்கியவர்கள் பாக்கியம் செய்தவர்கள் என்றாள்.

அடிகளார்க்கு அருள்நிலை வந்த பிறகுதான் வணங்க வேண்டும் என்ற மனப்பான்மை கொண்டிருந்த தொண்டர்கட்கு நாணமும், தவிப்பும் ஏற்பட்டன.

எந்த நேரத்தில் இவர் அடிகளாராக இருப்பார்? எந்த நேரத்தில் இவர் அம்மாவாக இருப்பார். நமக்கென்ன தெரிகிறது என்று கருதி அதன் பிறகே செவ்வாடைத் தொண்டர்கள் அடிகளார் திருவடிகளில் எப்பொழுதும் விழுந்து வணங்கும் பழக்கத்துக்கு ஆளானார்கள்.

## Divine Miracles at Melmaruvathur

### Instruction sought when one is not mature:

"Once a Brahmin who was devoted to Mother, asked for spiritual instruction. He was a bachelor and he lived like a sanyasi. He also had a following in North Indi. Mother called an engineer along with this Brahmin and asked them to get a well dug for the convenience of the devotees. She ordered him to make a hut for himself near the well and practice meditation. The Brahmin, however, was in a hurry and he started pestering Mother. Mother tactfully told him that he is not yet ready for spiritual instruction. The Brahmin and the engineer however had no control over their desires and senses. When they did not get good food they packed up and left for the North.

Once Mother had told the engineer that he was a pig in his previous birth and that it was Mother who had restored him and given him education in the religious texts like the Vedas and Upanishads.

He also sought advice from Mother. He was free from family responsibilities and he used to say that he desired to stay in the temple and do service to Mother. Omce he had gone home to see his family and he could not return from there because of his attachment to his family. He had not developed detachment.

Once a man wanted to learn Sri Vidya from Adigalar. He was asked to do service and meditation and be silent. He was totally a man of the world and egoistic as well. Hence he left the place without even informing anyone.

Once a retired military officer wanted to get advice from Mother. He could chant the mantras excellently and impressively. Adigalar however made him wait for sometime. The man lost patience and left.

Mother used to say, Ït is not necessary to do grand acts of yoga and other feats when simple acts of service suffice. Pure devotion and selfless service are enough for salvation". Many men who were skilled and trained in Yoga and the Shastras were made to realise by Adigalar that meditation and selfless service and enough for overcoming life.

## அமாவாசை – பௌர்ணமி விளக்குப்பூசை பலன்கள்

**ஆவணி – அமாவாசை–பௌர்ணமி :**

புத்திரப்பேறு உண்டாகும்.
குழந்தைப்பேறு இல்லாத குறை நீங்கி நல்ல மக்களைப் பெறும் அதிர்ஷ்டம் உண்டாகும்.

**புரட்டாதி – அமாவாசை–பௌர்ணமி :**

பசுக்கள் விருத்தி உண்டாகும்.

கால்நடைச் செல்வம் பெருகி நிறைந்த பால் வளப்பெருக்கம் உண்டாகும்.

## நவராத்திரி இலட்சார்ச்சனை…

(1ஆம் பக்க தொடர்ச்சி)

நவராத்திரி ஒன்பது நாளும் இப்படி மற்றவர்களின் நன்மைக்காக இந்த இலட்சார்ச்சனை நடைபெறுகிறது. நமது இலட்சியம் நிறைவேற இந்த இலட்சார்ச்சனை துணைபுரிகின்றது.
பக்தர்கள், தங்கள் அருகாமையிலிருக்கும் மன்றங்களையோ அல்லது மன்ற சக்திகளையோ தொடர்புகொண்டு தங்கள் பெயர்களையும், நட்சத்திரங்களையும் பதிவு செய்து மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி ஆலயத்தில் நடைபெறும் இலட்சார்ச்சனையில் பங்குகொள்ளுங்கள்.

### இலட்சியங்களை அடைய இலட்சார்ச்சனை செய்வோம்!

மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீடத்தில் நவராத்திரி நாளில் அன்னையால் ஏற்றப்படும் அகண்ட தீபத்தில் முக்கூட்டு எண்ணெய் ஊற்றி அந்த தீப தரிசனத்தைப் பெற்றுச் செல்லுங்கள். அங்கு சென்று தரிசனம் பெற வாய்ப்பு கிடைக்காதவர்கள் அருகிலுள்ள அன்னையின் துணை ஆலயங்களான மன்றங்களில் ஏற்றப்படும் அகண்ட தீபத்திற்கு முக்கூட்டு எண்ணெய் ஊற்றி தரிசனம் பெறுங்கள்.
இவற்றால் உங்கள் ஊழ்வினைக் கொடுமைகள் தணியும்.

## ஆண்டுச்சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?

அன்னை புரியும் அற்புதங்களை உங்கள் உறவினர், நண்பர்களுக்கு இலகுவாக எடுத்துச் சொல்ல சக்தி ஒளியை பெற்றுக்கொடுங்கள்.

**சக்தி ஒளி**

**ஆன்மிக ஒளி பரப்பும் அறிவுச்சுடர்**

தனி இதழ்

ரூபா ₹ 15.00

ஆண்டுச்சந்தா

ரூபா ₹ 180.00 (இந்தியா)

ஆயுள் சந்தா

ரூபா ₹ 2600.00 (இந்தியா)

**வெளிநாட்டுச் சந்தா**

**இந்திய ரூபா ₹ 3500.00**
**(இரண்டு ஆண்டுகள்)**

ஆண்டுச்சந்தாக்களை மன்றங்களினூடாகவும் அல்லது ஆதிபராசக்தி அறநிலையத்துக்கு தொகையை அனுப்பி நேரடியாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

உங்கள் பெயர், விலாசம், மற்றும் நீங்கள் யாருக்கு அனுப்ப விரும்புகிறீர்களோ அவர்கள் பெயர்,விலாசம், மற்றும் இத்தனை காலத்திற்கான சக்தி ஒளி சந்தா எனும் விபரங்கள் தெளிவாக எழுதப்படல்வேண்டும்.

உரிய தொகையினை **“ஆதிபராசக்தி கல்வி,மருத்துவ, பண்பாட்டு அறநிலை”** எனும் பெயருக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

Address:
Editor, ‘Sakthi Oli’ Office,
Adhiparasakthi Sithar Peetam,
Melmaruvathur 603319,
Tamil Nadu, South India.

**சக்தி ஒளி சந்தாதாரர்களுக்கு!**

சந்தா புதுப்பித்தல் மற்றும் விலாச மாற்றத்திற்கு மேற்குறிப்பிட்ட விலாசத்திற்குக் கடிதம் மூலம் அல்லது 044-27529900 என்ற தொலைபேசி எண்ணிலோ தொடர்புகொள்ள முடியும்.

நேரடியாக இணையத்தளத்தினூடாகவும் ஆன்லைனில் புதுப்பித்தல், புதிய சந்தாக்களை மற்றும் தொடர்புகளை ஏற்படுத்த முடியும்.

**www.sakthioli.com**

## Melbourne - Mandrams – Upcoming Events – September 2016



## Melmaruvathur Aadhiparasakthi Vara Valipaattu Mahalir Mandram



Join Prayers: Every Friday 7.30p.m. – 9.30p.m.

**Vermont South Community House,**
Karobran Drive – Vermont South 3133 - (Mel.Ref.: 62 G 7)

| | | | |
|---|---|---|---|
| 02.09.2016 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 09.09.2016 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 16.09.2016 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja “பௌர்ணமி விளக்குப் பூஜை” |
| 23.09.2016 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 30.09.2016 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

Lalor

Join Prayers: Alternatie Sundays 4.00p.m. – 6.00p.m.

Yarra Plenty Regional Library Service (Hall adjacent to the library)
May Road - Lalor 3075 (Mel.Ref.: 8 K 6)

| | | | |
|---|---|---|---|
| 04.09.2016 | SUNDAY – ஞாயிறு | 4.00p.m. – 6.00p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 18.09.2016 | SUNDAY – ஞாயிறு | 4.00p.m. – 6.00p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

## கண் கொடுத்த கலச தீர்த்தம்

------------------------------------------ சக்தி அமரானந்தம் - தஞ்சாவூர்

“தெய்வம் இல்லை! இல்லவே இல்லை! பாவமாவது புண்ணியமாவது! அவையெல்லாம் அபத்தம்!”என்றெல்லாம் எண்ணுகிற கலியுகம் இது!

கண்காணி இல்லையென்று கள்ளம் புரியும் படிப்பாளிகள் பெருகி வருகின்ற காலம் இது!

பாவ புண்ணியங்களைப் பற்றிக் கவலையே படாத ஒரு தலைமுறை இன்று உருவாகிக்கொண்டு இருக்கிறது.

இத்தகைய கால கட்டத்தில்தான் அன்னை ஆதிபராசக்தி ‘அடிகளார்’என்ற மானுட வடிவில் அவதார நோக்கம் கொண்டு வந்திருக்கிறாள்.

தெய்வம் உண்டு! பாவமும் உண்டு. புண்ணியமும் உண்டு. அவற்றுக்கான பலன்களும் உண்டு. என்று பக்தர்கட்கு அனுபவங்கள் தந்து புரிய வைக்கிறாள் அன்னை.

அன்னை என்பவள் கருணையின் வடிவம். அதனால் தான் பரம்பொருளான தான் ‘சக்தி ரூபம் எடுத்து வந்திருக்கிறேன்’என்று சொல்லிக் காட்டுகிறாள். நம்மிடம் கருணை காட்டித் திருத்துகிறாள்.

தஞ்சை மாவட்டம், திருவையாறு வட்டத்தில் வெள்ளாளம்பரம்பூர் என்ற கிராமம். 360 வேலி நிலமுள்ள பெரிய கிராமம். அங்கே 16.05.1984 அன்று கிராம தேவதைகட்கு ஒரு விழா கொண்டாடினார்கள். அம்மாவைப் பற்றிச் சொற்பொழிவு நடத்துமாறு அடியேனை அழைத்திருந்தார்கள்.

(தொடர்ச்சி…15ஆம் பக்கம்)

# கண் கொடுத்த கலச தீர்த்தம்…

மேல்மருவத்தூர் அன்னை ‘அடிகளார்’என்னும் மானுடம் தாங்கி அவதாரமாக இறங்கி வந்திருப்பதையும், பக்தர்கள் வாழ்வில் அவள் ஊட்டுகிற அனுபவங்களையும் தெரிந்த அளவில் எடுத்துக் கூறினேன்.

சொற்பொழிவு முடிந்ததும் என்னிடம் ஒரு அன்பர் வந்தார். பெயர் மதியழகன், பி.எஸ்.சி., பி.ஈ., பட்டம் பெற்றவர். மேட்டூர் மன்றத்தில் உறுப்பினராக உள்ளார். மேட்டூரில் நடந்த வேள்வியின் மகத்துவம் பற்றிப் பக்தர் ஒருவரின் கனவில் அன்னை உணர்த்தியதாக அவர் கூறினார்.

“ஐயாயிரம் ஆண்டுகட்கு முன்பு இதே இடத்தில் வேள்வி ஒன்று நடந்தது. அந்த வேள்வியில் கலந்து கொண்டவர்களே இந்த வேள்வியிலும் கலந்து கொண்டார்கள்”என்றாளாம்.

அதுகேட்டு வியப்புற்று நின்றேன்.

ஆதிபராசக்தி ஆன்மிக இயக்கத்தில் தொண்டனாகச் சேர்வதற்கும், பணி புரிவதற்கும், வேள்விப் பணியில் ஈடுபடுவதற்கும் கூட ஏதோ பழம்பிறவித் தொடர்பு ஒன்று இருக்க வேண்டும். ஆம்! அப்படித்தான் நினைக்க வேண்டியிருக்கிறது.

சக்தி மதியழகன் இன்னொரு செய்தியாக வேள்விக் கலசத்தின் மகத்துவத்தைப் பற்றிக் கூறினார்.

நீலகிரி மாவட்டத்தில் குந்தா மின் வாரியத்தில் பணிபுரியும் காவலாளி ஒருவர். அவருக்கு ஒரு கண் பார்வை மங்கிக் கொண்டு வந்தது. சில நாட்கள் சென்ற பின்னர் இரண்டாவது கண் பார்வையும் குன்றி விட்டது.

இரண்டு கண்களுமே பார்வையின்றிப் போய்விட்டன. பார்வையற்ற நிலையிலே நம் வேலை போய்விட்டால் எப்படிக் குடும்பத்தைக் காப்பாற்றுவது? என்று கவலைப்பட்டுக்கொண்டு நிம்மதியில்லாமல் தவித்தார் அந்தக் காவலாளி.

ஒருமுறை சக்தி மங்கையற்கரசி என்பவரது வீட்டில் வழிபாடு நடைபெற்றுக்கொண்டிருந்தது. அந்த வழிபாட்டில் அந்தக் காவலாளி கலந்து கொண்டார். அவரது நிலையைக் கண்ட சக்தி மதியழகன், மேல்மருவத்தூர் வேள்வியில் வைக்கப்பட்ட கலச தீர்த்தத்தை அவருக்குக் கொடுக்குமாறு கூறியிருக்கிறார். அந்தக் கலச தீர்த்தத்திலிலுந்து இரண்டொரு சொட்டுகள் அந்தக் காவலாளியின் கண்களில் விடப்பட்டன.

என்ன வியப்பு! தீர்த்தம் விடப்பட்ட ஐந்தாவது நிமிடத்தில் அவருக்குக் கண் பார்வை வந்துவிட்டது.

இந்தச் செய்தியை சக்தி மதியழகன் கூறி முடித்ததும், தன்னை நாடி வரும் ஆன்மாவுக்கும் ஏதோவொரு வகையில் அருள்பாலித்துத் தன்னிடம் ஈர்த்துக்கொள்கிறாள் அன்னை என்ற எண்ணம் தோன்றியது.

இம்மைக்கும், மறுமைக்கும் பலன் தரும் எத்தனையோ வழிமுறைகளை அம்மா இந்த அவதார காலத்தில் உருவாக்கிக் கொடுத்திருக்கிறாள். அவற்றுள் வேள்விப் பூஜையும் ஒன்று.

(தொடர்ச்சி)..16ஆம் பக்கம்)

குருவடி சரணம்! திருவடி சரணம்!!

*ஓம் சக்தியே! ஆதிபராசக்தியே!*



**ஆதிபராசக்தி சித்தர்பீடம் - மேல்மருவத்தூர்**

***ஆலய சிறப்பு விழாக்கள்***

**2016 - ஸ்ரீ துர்முகி வருடம்**

| | | | | |
|---|---|---|---|---|
| ஆவணி | 16 | 01.09.2016 | வியாழன் | **அமாவாசை** |
| ஆவணி | 31 | 16.09.2016 | வெள்ளி | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| புரட்டாசி | 14 | 30.09.2016 | வெள்ளி | **அமாவாசை - வேள்வி** |
| புரட்டாசி | 15 | 01.10.2016 | சனி | **சித்தர் பீடத்தில் நவராத்திரி பெருவிழா ஆரம்பம்** |
| புரட்டாசி | 30 | 16.10.2016 | ஞாயிறு | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| ஐப்பசி | 14 | 30.10.2016 | ஞாயிறு | **அமாவாசை - வேள்வி** |
| ஐப்பசி | 29 | 14.11.2016 | திங்கள் | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| கார்த்திகை | 14 | 29.11.2016 | செவ்வாய் | **அமாவாசை - வேள்வி** |
| கார்த்திகை | 28 | 13.12.2016 | செவ்வாய் | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| மார்கழி | 10 | 25.12.2016 | ஞாயிறு | **கிறிஸ்மஸ்** |
| மார்கழி | 13 | 28.12.2016 | புதன் | **அமாவாசை - வேள்வி** |

# ஆன்மிக நாட்குறிப்பு

(அவுஸ்திரேலிய நேரம்)

| | | | | |
|---|---|---|---|---|
| 01.09.2016 | வியாழன் | ஆவணி | 16 | அமாவாசை விரதம் |
| 05.09.2016 | திங்கள் | ஆவணி | 20 | விநாயகர் சதுர்த்தி விரதம்<br>கொடியேற்றம் - ஸ்ரீ விஷ்ணு<br>ஸ்ரீ சிவா - விஷ்ணு ஆலயம் - கரம்டவுண்ஸ் - மெல்போர்ண் |
| 07.08.2016 | புதன் | ஆவணி | 22 | ஷஷ்டி விரதம் |
| 13.09.2016 | செவ்வாய் | ஆவணி | 28 | ஏகாதசி விரதம் |
| 14.09.2016 | புதன் | ஆவணி | 29 | பிரதோச விரதம் |
| 16.09.2016 | வெள்ளி | ஆவணி | 31 | **பூரணை விரதம் - பௌர்ணமி திருவிளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம் - மெல்போர்ண்<br>மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு<br>அன்னை ஆதிபராசக்தி சித்தர் பீடம் நியுசவுத்வேல்ஸ் மன்றம் - சிட்னி<br>மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீட சிட்னி சென்டர் |
| 17.09.2016 | சனி | புரட்டாதி | 01 | மஹாலய பட்சாரம்பம்<br>புரட்டாசி சனி விரதம் - 1ஆம் வாரம் |
| 18.09.2016 | ஞாயிறு | புரட்டாதி | 02 | **திருவிளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மன்றம் மெல்போர்ண் அவுஸ்திரேலியா (AMMA) |
| 19.09.2016 | திங்கள் | புரட்டாதி | 03 | சங்கடசதுர்த்தி விரதம் |
| 20.09.2016 | செவ்வாய் | புரட்டாதி | 04 | மஹா பரணி |
| 21.09.2016 | புதன் | புரட்டாதி | 05 | கார்த்திகை விரதம் |
| 24.09.2016 | சனி | புரட்டாதி | 08 | புரட்டாசி சனி விரதம் - 2ஆம் வாரம் |
| 26.09.2016 | திங்கள் | புரட்டாதி | 10 | ஏகாதசி விரதம் |
| 28.09.2016 | புதன் | புரட்டாதி | 12 | பிரதோச விரதம் |
| 30.09.2016 | வெள்ளி | புரட்டாதி | 14 | அமாவாசை விரதம் |
| 01.10.2016 | சனி | புரட்டாதி | 15 | சித்தர் பீடத்தில் நவராத்திரி பெருவிழா ஆரம்பம்<br>புரட்டாசி சனி விரதம் - 3ஆம் வாரம் |
| 08.10.2016 | சனி | புரட்டாதி | 22 | புரட்டாசி சனி விரதம் - 4ஆம் வாரம் |
| 15.10.2016 | சனி | புரட்டாதி | 29 | புரட்டாசி சனி விரதம் - 5ஆம் வாரம் |

## கண் கொடுத்த கலச தீர்த்தம்...

வேள்விப்பூஜை மனிதகுல நன்மைகளுக்காகவே அன்னையால் வகுத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

அந்தக் கலச தீர்த்தம் அற்புத சக்தி படைத்தது. ஒவ்வொரு குடும்பத்திற்கும் அதுதான் சமய சஞ்சீவி! நம் குடும்பத்தில் யாருக்காவது உயிர் ஆபத்து நேரும்போது அந்தக் கலச தீர்த்தத்தை அருந்தக் கொடுத்துவிட்டு, அதன்பிறகே மற்ற சிகிச்சைகளைக் கொடுக்க வேண்டும்.

அம்மா பக்தர் ஒவ்வொருவர் வீட்டிலும் கலசம், விளக்கு ஆகியவை இருக்க வேண்டும். அன்றாடம் அதற்கு ஆராதனை செய்ய வேண்டும்.

“கலச விளக்குகளுக்கு விலை வைப்பது உன் பாவத்தைத் தணிப்பதற்காகவே”என்பது அன்னையின் அருள்வாக்கு.

அம்மாவின் அருள்பெற்ற ஒரு சிறு துரும்பு கூட ஆற்றல் பெற்றது. அம்மாவோடு சம்பந்தப்பட்ட ஒவ்வொரு பொருளையும் எடுத்து வைத்துக்கொண்டு போற்றுகிறார்கள். அந்தப் பொருட்கள் மூலமாகவும் ஏதோவொரு வழியில் பலன் தருகிறாள் அன்னை.

அருள் பெறின் துரும்பும் ஓர் ஐந்தொழில் புரியும்
தெருள் இது எனவே செப்பிய சிவமே!
அருளுறின் எல்லாம் ஆகும் ஈது உண்மை
அருளுற முயல்க என்று அருளிய சிவமே!
ஏன்று பாடுகிறார் வள்ளலார். ஆதனை நம் அன்னை ஆதிபராசக்தி அனுபவமாக உணரும்படிச் செய்து காட்டுகிறாள்.
ஓம் சக்தி!